# திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு

## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்ப - நிபுணத்துவம் சாரா சேவை வகுதியில் ஆய்வுகூடப் பணியாளர் பதவியில் III ஆம் தரத்திற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பப் படிவங்களைக் கோரும் அறிவித்தல்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்ப - நிபுணத்துவம் சாரா சேவை வகுதியில் III ஆம் தரத்தில் ஆய்வுகூடப் பணியாளர் பதவிக்கான 05 வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகளைப் பூர்த்திசெய்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **இணைத்துக்கொள்வதற்கான தகைமைகள்**

**i. கல்வித் தகைமைகள்** : க.பொ.த. சாதாரண தரத்தில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன், எல்லாமாக (02) ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்

**ii. தொழில்சார் தகைமைகள்** : பதவிக்குரித்தான செயற்பாடுகளுக்குரியவாறு தொழில்சார் தகைமைகளைப் பெற்றிருப்பது விசேட தகைமையாகக் கருதப்படும்.

**iii. சேவை அனுபவம்** : பதவிக்குரித்தான செயற்பாடுகளுக்கு உரியவாறு அனுபவத்தைப் பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

2.

**i. சம்பளத்திட்டம்:**

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 03/2016 ற்கு ஏற்ப,
குறியீட்டு இலக்கம் : PL-1-2016
சம்பள அளவுத்திட்டம் : ரூ. 24250-10x250-10x270- 10x300- 12x330- 36410/-
(அரசாங்க நிருவாக 3/2016 சுற்றறிக்கையின் அட்டவணை IIஇற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்)

**ii. வயதெல்லை**

விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**

**i.** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கேற்ப, ஆட்சேர்ப்புச் செய்யப்படும். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போதே தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.

**ii.** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

| புள்ளி வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்சளவான புள்ளித் தொகை |
|---|---|
| மேலதிகக் கல்வித் தகைமைகள் | 20 |
| தொழில்சார் தகைமைகள் | 20 |
| பதவிக்குரித்தாகப் பெற்றுக் கொண்டுள்ள அனுபவம் | 40 |
| வெளிச் செயற்பாடுகள் | 15 |
| நேர்முகப் பரீட்சையின்போது வெளிக்காட்டப்படும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

**iii. உடல் தகைமை:**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**iv. வேறு தகைமைகள்** :

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி சிறந்த குணவியல்புகளை உடையவராக இருத்தல் வேண்டும்.

iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. **அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல்.**

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 01/2014(IV) இற்கு ஏற்ப ஆரம்ப வகுதியின் சகல அலுவலர்களும் அடுத்த அரசகரும மொழித் தேர்ச்சி மட்டமான 4ஆம் வகுதி சித்தியடைய வேண்டியது அவசியமில்லை என்பதுடன், அதன்பொருட்டு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்ட பாடவிதானத்துக்கு அமைய நடாத்தப்படும் 50 மணித்தியால மொழிப்பயிற்சிப் பாடநெறியில் கலந்துகொள்வது மாத்திரம் போதுமானதாகும்.

5. **விண்ணப்பிக்கும் முறை:**

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள சுயவிபரங்களை உள்ளடக்கி தனிப்பட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 2017.10……ஆம் திகதிக்கு முன்னர், ‘‘பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த.பெ. 557, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ‘‘தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ஆய்வுகூடப் பணியாளர் பதவி” என்று குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை அவர்களது திணைக்களத்தின் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் / சமாதான நீதவான் /சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், 41,500/- ரூபாவை (அரசாங்க நிருவாக 3/2016 சுற்றறிக்கையின் அட்டவணை Iஇற்கு ஏற்ப) அல்லது அதற்கு அதிகமான தொகையினை வருடாந்த திரட்டிய சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவியிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும் போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி அறியத் தரப்பட மாட்டாது. உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**6. போலியான தகவல்களை வழங்குதல்**

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிக்கு முன்னர் தெரியவருமிடத்து விண்ணப்பதாரியின் அபேட்சகத்தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**7. சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்**

I. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள், அநாதைகள், ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

II. குறிக்கப்படுகின்றவாறு இந்தத் திணைக்களத்திற்கு உரித்தான எந்தவொரு தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரியிலும் பணியாற்றுவதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

III. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் பதவிக்குரித்தான ஆட்சேர்ப்புத் திட்ட ஏற்பாடுகளுக்கும், தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும் அரசாங்க அல்லது தொடர்புடைய அமைச்சு அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்படும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

**8.** வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

**9.** இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில் மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

......................... 2017
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
கொழும்பு 10.

பீ.என்.கே. மலலசேகர
பணிப்பாளர் நாயகம்